## ஃகுர்பானி கொடுக்கும்போது ஓதவேண்டிய துஆ

ஃகுர்பானிக்கான பிராணியை ஃகிப்லாவை நோக்கிப் படுக்கவைத்து இந்த துஆவை ஓதவேண்டும்.

إِنِّي وَجَّهْت وَجْهِيَ لِلَّذِي فطَرَ السَّمٰوَاتِ وَالْأَرْضَ عَلَى مِلَّةِ إِبْرَاهِيمَ حَنِيفًا، وَمَا أَنَا مِنَ الْمشْرِكِينَ، إِنَّ صَلَاَتِي وَنسكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلهِ رَبِّ الْعَالَمِينَ لَاشَرِيكَ لَه، وَبِذَلِكَ أُمِرْت وَأَنَا مِنَ الْمسْلِمِينَ، اَللّٰهمَّ مِنْكَ وَلَكَ

*பொருள்: நான் என்னுடைய முகத்தை இந்த வானங்களையும் பூமியையும் படைத்தவனாகிய அந்த இறைவனை நோக்கித் திருப்புகிறேன் மற்றும் முழுமையாகவே இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழியைக் கடைபிடிப் பவனாக உள்ளேன், நான் இணை வைப்பவன் அல்ல. என்னுடைய தொழு கையும், என்னுடைய ஃகுர்பானியும் என்னுடைய வாழ்க்கையும் என்னு டைய மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியது, அவனுக்கு யாரும் இணையில்லை, இவ்வாறே நான் கட்டளையிடப்பட் டும் உள்ளேன், நான் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் முஸ்லிமாக உள் ளேன். எங்கள் இறைவனே, இது உன்னிடமிருந்து, உனக்காகவே,அதன்பின்*

بِسْمِ اللَّهِ وَاللَّه أَكْبَر

என்று கூறி அதனை அறுக்கவேண்டும். அறுக்கப்படும் பிராணி வேறு ஒருவர் சார்பாக அறுக்கப்பட்டால் أَللهُمَّ تَقَبَّلْ مِنْ என்று கூறி அவருடைய பெயரைச் சொல்லவேண்டும். (முஸ்லிம்)

* * *

www.uzairfalahi.com